மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரிக்கைத் தீர்ப்பாயம்,மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,தூத்துக்குடி
முன்னிலை:திருமதி. டி. பகவதிஅம்மாள், பி.ஏ., பி.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி
2019ம் ஆண்டு ஜுன் மாதம் 4ம் நாள் செவ்வாய் கிழமை
எம்.சி.ஓ.பி. 283/17

K.ஜெயகுமார்,
த/பெ. குமாரபெருமாள் (எ)போஸ், இந்து, வயது,26,
எண்.1/70, கிழக்கு தெரு,
சந்திராகிரி, ஒட்டபிடாரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம். ....மனுதாரர்

/எதிர்/

1. N.முப்பிடாதி,
த/பெ.நடராஜன், வயது 67,
மெயின் ரோடு, வடகரை,
செங்கோட்டை தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.

2. நியூ இந்தியா அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
அலுவலகம், எண்.182/221, எஸ்.என்.ஹ ரோடு,
திருநெல்வேலி ஜங்சன்,
திருநெல்வேலி மாவட்டம் - 627001. .....எதிர்மனுதாரர்கள்

மனுதாரர் இம்மனுவை மோட்டார் வாகன சட்டம் 59/1988 பிரிவகள்.140 மற்றும் 166 படிவம் II விதிகள் 4(1) மற்றும் (2) தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய விதிகள் 1989 அரசாணை எண்.1170 உள்துறை (போக்குவரத்து -VII) தேதி 01.07.1989-ன் கீழ், கடந்த 25.07.2017 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் மனுதாரர் அடைந்த காயங்களுக்கு எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு ரூ.25,00,000/-த்யை இழப்பீடாக வழங்குமாறும், மேற்படி தொகைக்கு விபத்து நடந்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் வரை ஆண்டொான்றுக்கு 12% வட்டி மற்றும் செலவு தொகையுடன் வழங்குமாறு கோரி தாக்கல் செய்துள்ளார்.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் 11.10.17

மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 24(1)-ன் படி செலுத்த வேண்டிய நீதிமன்ற முத்திரை கட்டணம் ரூ.24,372.50/-. மனுதாரர் அசல் மனுவில் செலுத்திய நீதிமன்ற கட்டணம் ரூ.20/- போக வ.வி.எண்.864/2017-ல் 15.11.2017ம் தேதிய உத்தரவுப்படி பாக்கி நீதிமன்ற முத்திரை கட்டணம் ரூ.24,352.50/-ஐ

செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு பெறப்பட்டது.

இந்த மனுவானது 15.11.2017 அன்று தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் எம்.சி.ஓ.பி.376/2017 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 14.12.2017 அன்று எம்.சி.ஓ.பி.283/2017 ஆக இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆலன் அரிஸ்டாடைல் அவர்களும்,1வது எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதரப்பாக்கப்பட்டும், 2வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T. சுபேந்திரன் அவர்கள் ஆஜராகியும் எதிர் உரை தாக்கல் செய்யாததால் அழைத்தும் ஆஜரின்றி ஒருதரப்பாக்கப்பட்டும், பின்னிட்டு இ.ம.எண்.1/2019, 16.03.2019 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் 25.06.2018 அன்று 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டும், இம்மனு 04.06.2019 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது மனுதாரரின் வருகை தவறுகைக்காக இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்பாணை உத்தரவு</u>

1. மனுதாரர் அழைத்தும் ஆஜரில்லை. மனுதாரர் தரப்பில் வழக்கை நடத்துவதற்கு முன் வரவில்லை. எனவே மனுதாரரின் வருகை தவறுகையின் காரணமாக இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவு தொகைக்கு ஆணையில்லை.

2019-ம் ஆண்டு ஜுன் மாதம் 4-ம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒம்/- த.பகவதி அம்மாள்,
மோட்டார் வாகன விபத்து இழப்பீடு
கோரிக்கைத் தீர்ப்பாய நீதிபதி, மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர்,
தூத்துக்குடி.